விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 144 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 29 வெள்ளிக்கிழமை (12.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட

## வெடுக்குநாறி ஆலய பூசகர் உட்பட இருவர் நீதிமன்றால் விடுதலை

வழிபாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க அனுமதி

(வவுனியா)
பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் 15

## எழுந்தமானமாக யாரையும் கைது செய்ய முடியாது

தொல்லியல் திணைக்களத்தினை எச்சரித்த வவுனியா நீதிமன்றம்

(வவுனியர்)
பொதுமக்களை எழுந்தமானத் துக்கு கைது செய்து, நீதிமன் றத்துக்கு அழைத்து வராதீர் 15

‘வெடுக்குநாறி எங்கள் சொத்து’

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம்




(வவுனியா)
வெடுக்குநாறிமலை ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தின் பூசாரி மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் கைதை கண்டித்து யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் 15

# உப்புச்சப்பற்ற

## ரணில் – தமிழ்த் தரப்பு சந்திப்பு

(கொழும்பு)

- தீர்க்கமான முடிவின்றி கலந்துரையாடல் நிறைவு.
- அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக ரணில் தெரிவிப்பு.
- 1985ஆம் ஆண்டு வரைபடத்துக்கு அமைய காணியை விடுவிக்க தமிழ்த் தரப்பால் கோரிக்கை.
- அரசியல் பிரச்சினை தொடர்பில் இன்று கலந்துரையாடல்

(16ஆம் பக்கம் பார்க்க)

### மசகு எண்ணெய் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)
எரிபொருள் விலையானது முந்தைய நாளின் வீழ்ச்சிக்கு பின்னர் நேற்று வியாழக் கிழமை அதிகரித்துள்ளது.
அதன்படி, ப்ரெ ண்ட் வகை மசகு 15

### யூரியாவின் விலையை மேலும் குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)
அரசாங்கத்தினால் வழங் கப்படும் யூரியா உரத்தின் விலையை மேலும் குறைக்கநடவடிக்கை 16

## கிணற்றில் விழுந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

உரும்பிராயில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட் பட்ட உரும்பிராய் பகுதியில் வசித்து வந்த இளம் குடும்பப் 15

## தலைமன்னாரில் இனிப்புப் பொருட்களை வழங்கி இரு சிறுமிகளை கடத்த முயற்சி

பொதுமக்களால் கடத்தல் முறியடிப்பு; இருவர் கைது

(மன்னார்)
தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமப் பகுதி யில் வியாபார பொருட்களை ஏற்றி வந்த வாகனம் ஒன்று இரு சிறுவர்களுக்கு இனிப்பு பொருட்களை வழங்கி கடத்து வதற்கு முற்பட்ட நிலையில் பொதுமக்களின் உதவியுடன் கடத்தல் முறியடிக்கப்பட்டுள் ளது.
நேற்று மதியமளவில் வாக னத்தில் வியாபார பொருட் களை விற்பனை செய்ய வந்த வாகனம் 16



## காணி கட்டளைச் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ளுங்கள்

அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்பு

(கொழும்பு)
நடைமுறை அபிவிருத்திச்செயற் பாடுகளுக்கு ஏற்றவாறு காணிக் கட்டளைச் சட்டங்களில் திருத் தங்களை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.
இப் பணிகளை துரிதப்படுத்துவதற்க 15

யாழ்.போதனா வைத்தியசாலையில்

## போதை பாவனையுடன் தொடர்புடைய கைதி மரணம்

(யாழ்ப்பாணம்)
போதைப்பொருள் பாவ னையுடன் தொடர்புடைய 32 வயதான யாழ்ப்பாணம் சிறைச் சாலையின் சிறைக் கைதி ஒரு வர் நேற்று வியாழக்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.
குறித்த கைதி சிறுநீரக செயலிழப்பு 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




## வடமராட்சி வடக்கு தும்பளை
## நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

# வருடாந்த வெளிமடை உற்சவம்

## 2023.05.26 - 27ஆந் திகதி

## அறிவித்தலும் ஆசித்தலும் பூஜித்தலும்

**நெல்லண்டை அம்மன் துதி**

நாடு மிகவுடையால் நெல்லண்டை எம் பதியுறைவாள்
சாடும் வினைகள் தகர்த்திடும் சால்புடையாள் - பீடுடைய
தக்கன் செய்மறை வேள்விதனை மாய்த்திடும்
மிக்க மதிநலத்தாள் மலர்த்தாள் சரண்

சுபமங்களம் நிறைந்த சோபகிருது வருஷம் வைகாசி மாதம் 5ம்நாள் (19.05.2023) வெள்ளிக்கிழமை விளக்கு வைத்தலும் தொடர்ந்து (26.05.2023) வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடைபெற இருக்கும் அனைத்து தெய்வ கைங்கரியங்களும் பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசி வேண்டியும் அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும் அனைத்து நிலை அடியார்களும் அன்பர்களும் உரித்தானவர்களும் வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம்.

குறிப்பு

தும்பளை இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் விளக்கு வைத்தல் (12.05.2023) வெள்ளிக்கிழமை வேள்வி உற்சவம் (19.05.2023 - 20.05.2023) நடைபெறும்.

ஆசித்தலும் பூஜித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக.

அன்னையின் அடிமை

பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும் **சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள்**
**சிவஸ்ரீ இராமசுந்தரலிங்கக்குருக்கள்**
**சிவஸ்ரீ சோம. தனஞ்சயக்குருக்கள்**

(C-6533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை 1 முதல் சமுர்த்தி நிவாரணம்
# நலன்புரி நன்மைகள் சபை அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.**

மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட எந்தவொரு வங்கி ஊடாகவும் இந்த நிவாரண நிதியை பெற்றுக்கொள்ள முடியும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

சமுர்த்தி நிவாரணத்தை பெறுவதற்கு தகுதியானவர்களை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் கடந்த 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், தற்போது பிரதேச செயலாளர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிவாரணம், "ஏழ்மையானவர்கள்" மற்றும் "மிகவும் ஏழ்மையானவர்கள்" என்ற இரு பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது.

மிகவும் ஏழ்மையானவர்களுக்கு 15,000 ரூபா கொடுப்பனவும் ஏழ்மையானவர்களுக்கு 8,500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

அண்மைய பொருளாதார வீழ்ச்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நடுத்தர அளவில் பாதிப்பிற்குள்ளானவர்கள் என இரு பிரிவுகளின் கீழ் சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5,000 ரூபாவும் நடுத்தர அளவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2,500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. (நி)

# ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவு

(கொழும்பு)

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று ரயில் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுவதாக ரயில் போக்குவரத்து கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நேற்று முன்தினம் 24 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டிருந்தன.

10 அலுவலக ரயில்கள், 6 தபால் ரயில்கள் மற்றும் தூர சேவை ரயில்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் சில ரயில் சேவைகள் தாமதமானதாகவும் ரயில்வே பிரதி பொது முகாமையாளர் M.J.இதிபொலகே தெரிவித்துள்ளார்.

ரயில்வே வணிக பிரதி பொது முகாமையாளர் பதவிக்கு ஊழல்வாதி என தெரிவிக்கப்படும் ஒருவரை நியமிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தது.

இதன் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் ரயில் பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். (நி)

# புதிய ஆளுநர்கள் நியமனத்துக்கு ஐவரின் பெயர்கள் முன்மொழிவு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கான ஆளுநர்களை விலகுமாறு அரசாங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் விலகியதும் புதிய ஆளுநர்கள் நால்வரை நியமிப்பதற்கு ஐவரின் பெயர்கள் இதுவரை முன்மொழியப்பட்டுள்ளன.

அவர்களுள் நால்வர் அரசியல்வாதிகள், ஒருவர் அதிகாரி என தெரியவந்துள்ளது.

நான்கு அரசியல்வாதிகளுள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, முன்னாள் அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, நவீன் திஸாநாயக்க, தயா கமகே ஆகியோரின் பெயர்கள் அடங்குகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனிலிருந்து நாடு திரும்பியதும் புதிய ஆளுநர்களின் நியமனம் இடம்பெறும் என்று கடந்த வாரம் அரச தகவல்கள் தெரிவித்திருந்தன.

ஜனாதிபதி நாடு திரும்பியுள்ள நிலையில் புதிய ஆளுநர்கள் நியமனம் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மாகாண சபைத் தேர்தல்
## திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக கொண்டு வந்த மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் இந்தப் புதிய சட்டமூலத்தின் மூலம் நீக்கப்படவுள்ளது.

குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் பழைய வாக்களிப்பு முறையிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்னர் பல தடவைகள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன் வைக்க முயற்சித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# அமைச்சரவை மாற்றம்; ஒத்திவைத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சரவையை மாற்றியமைக்கும் தீர்மானத்தை காலவரையின்றி ஒத்திவைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அமைச்சரவை மாற்ற விவகாரத்தினால் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்பட்டு வருவதால் அரசியல் குழப்பங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் இந்த ஒத்திவைப்பு தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொண்டதாக தெரியவருகிறது. (நி)

# ஜனக ரத்நாயக்கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி



(கொழும்பு)

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக மின்வெட்டை நிறுத்துமாறு கூறி மக்கள் பக்கம் நின்று செயற்பட்டார்.

இதற்காக அவருக்கு எதிராக அரசாங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், அவர் 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று தகவல்களும் வெளியாகியுள்ளன. (நி)

# தீவிரமடைந்துவரும் மூன்று வகையான காய்ச்சல் மருத்துவர்கள் கடும் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

தற்போது நாடு முழுவதும் மூன்று வகையான காய்ச்சல் மிக வேகமாக பரவி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

டெங்கு, இன்புளுவென்சா மற்றும் எலிக்காய்ச்சல் ஆகியவை மிக வேகமாக பரவி வருவதாகவும், அவற்றின் அறிகுறிகள் ஒரே மாதிரியாக இருப்பதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தலைவலி, வாந்தி, உடல் வலி, சோர்வு போன்ற அறிகுறிகள் மூன்று வகையான காய்ச்சலிலும் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த மூன்று வகையான காய்ச்சலிலும் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவுகிறது, மேலும் ஒரு வாரத்தில் கிட்டத்தட்ட 2000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். (நி)

# சிறுபோக உரக் கொள்வனவிற்காக கூப்பன் வழங்க தீர்மானம்
## விவசாய அமைச்சு

(கொழும்பு)

சிறுபோகத்திற்கு தேவையான உரக்கொள்வனவிற்காக கூப்பன்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு ஹெக்டெயருக்கு 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்தார்.

இந்தத் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக கூப்பன்களை வழங்க தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய அச்[illegible]காக கூப்பன்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். .

அச்சு நடவடிக்கைகளுக்கு ஒரு வாரம் தேவை எனவும் அதன் பின்னர் கூப்பன்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் [illegible] சமரசிங்க குறிப்பிட்டார். (நி)

# மரக்கறிகளின் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

நிலவும் சீரற்ற காலநிலை காரணத்தால் சந்தையில், வீழ்ச்சியடைந்திருந்த மரக்கறிகளின் விலை மீண்டும் உயர்ந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

போஞ்சி, தக்காளி, உள்ளிட்ட மரக்கறிகளின் விலை கணிசமாக உயர்ந்துள்ளதாகவும் ஒன்றிணைந்த விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மனிங் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பொருளாளர் நிமல் அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புத்தாண்டு காலத்தில் மரக்கறிகளின் விலை குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியை 27 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது சென்னை அணி



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் நேற்று இரவு சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற சென்னை பட்டிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய சென்னை அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 167 ரன்கள் சேர்த்தது. ஷிவம் துபே 25 ரன்கள் சேர்த்தார்.

ருதுராஜ் 24 ரன், அம்பதி ராயுடு 23 ரன், ரகானே 21 ரன், ஜடேஜா 21 ரன் அடித் தனர். 8ஆவது வீரராக கள மிறங்கிய கப்டன் டோனி, அதிரடியாக ஆடி 9 பந்து களில் 20 ரன்கள் விளா சினார்.

டெல்லி கப்பிட்டல்ஸ் சார்பில் மிட்செல் மார்ஷ் 3 விக்கெட், அக்சர் பட்டேல் 2 விக்கெட் கைப்பற்றினார்கள்.

இதையடுத்து, 168 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது. அந்த அணியின் ரூசோவ் 35 ரன்னும், மனீஷ் பாண்டே 27 ரன்னும், அக்சர் படேல் 21 ரன்னும் எடுத்தனர். இறுதியில், டெல்லி அணி 20 ஓவரில் 8 விக்கெட் 140 இழப்புக்கு ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் சென்னை அணி 27 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. சென்னை அணி சார்பில் பதீரனா 3 விக்கெட், தீபக் சாஹர் 2 விக்கெட் வீழ்த்தினர்.(4)



# சவுதி அரேபியாவின் கிளப்பில் இணையவுள்ளார் மெஸ்ஸி?



கிறிஸ்டியானோ ரொனால்டோவைத் தொடர்ந்து லியோனல் மெஸ்ஸியும் இப்போது சவுதி அரேபிய கிளப்பில் ஒப்பந்தமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி கோடையில் பிரான்சின் பாரிஸ் செயின்ட் ஜேர்மைனை விட்டு வெளியேறி சவுதி அரேபியாவை தளமாகக் கொண்ட கால்பந்தாட்ட கிளப்பில் சேர உள்ளார் என்று ஒரு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

மெஸ்ஸி சமீபத்தில் சவுதி அரேபியாவிற்கு பயணத்தை மேற்கொண்டார், அதற்காக அவர் PSG அணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். அதே நேரம், மெஸ்ஸி சவுதி அரேபியாவில் சுற்றுலாத் தூதராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

PSG கிளப்புடன் மெஸ்ஸியின் தற்போதைய ஒப்பந்தம் ஜூன் மாத இறுதியில் முடிவடைகிறது.

இந்நிலையில், அவரது சவுதி அரேபியா பயணத்தைத் தொடர்ந்து, "மெஸ்ஸி ஒப்பந்தத்தை முடித்துவிட்டார். அவர் அடுத்த சீசனில் சவுதி அரேபியாவில் விளையாடுவார்," என்று பிரபல ஊடகத்தில் ஒரு ஆதாரத்தை மேற்கோளிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2828

நிருபன்




கிசாலினி




மதன்




அனுலட்சுமி




உஷா




ஜெயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தால் ஜி.எஸ்.பி வரிச்சலுகை பாதிக்கப்படலாம்

## பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி வரிச்சலுகையை இலங்கை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சடிசில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இதனை தெரிவித்துள்ள ஐக்கியமக்கள் சக்தியின் உறுப்பினர் இலங்கை இந்த வருட இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 500 மில்லியன் டொலர் பெறுமதியான வரிச்சலுகையை பெறும் நெருக்கடியை எதிர்கொள்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அதிகளவு அந்நிய செலவாணியை பெற்றுத் தரும் ஆடைதொழில்துறை இந்த வரிச்சலுகையிலேயே தங்கியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ள ஹர்சடிசில்வா புதிய விதிமுறைகளின் கீழ் இலங்கை பாகிஸ்தான் உட்பட ஆறு நாடுகள் ஜி.எஸ்.பி வரிச்சலுகைக்கு விண்ணப்பிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், நல்லாட்சி போன்ற விடயங்களை இலங்கை எவ்வாறு பின்பற்றியது என்பதை அடிப்படையாக வைத்தே 2024 முதல் 2034 வரையிலான காலப்பகுதிக்கு ஜி.எஸ்.பி வரிச்சலுகையை வழங்குவதா என்பதை தீர்மானிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ளது என கரிசனைகள் வெளியாகியுள்ளதால் ஜி.எஸ்.பிபிளஸ் வரிச்சலுகை பாதிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# அரகலயவின் பின்னணியில் வெளிநாட்டு குழு

## விரைவில் அம்பலமாகும் என்கிறார் நாமல்

(கொழும்பு)

அரகலயவுக்கு ஆதரவளித்த வெளிநாட்டு குழு யார் என்பது குறித்தும் விரைவில் மேலதிக விபரங்கள் வெளிவரும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாங்கள் மட்டுமல்ல, அரகலயவோடு இருந்த ஜனதா மக்கள் விடுதலை முன்னணியும் அரகலயாவில் வெளிநாட்டு குழுவொன்றுக்கு பங்கு இருப்பதாக இப்போது கூறுகின்றது.

ஜே.வி.பி அரகலயவின் ஒரு பகுதியாகும். எனவே அவர்களே இப்போது அரகலயவின் பின்னணியில் சில வெளிநாட்டு குழுக்கள் இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளனர்.

தற்போது அரகலயாவினால் நியமிக்கப்பட்ட அரசாங்கமே இருக்கின்றது. அரகலயாவினால் தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். அதன் காரணமாகவே இந்த அமைச்சரவையும் நியமிக்கப்பட்டுள்ளது என நாமல் தெரிவித்துள்ளார். (நி)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**
**வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி-2023/2024**
**(அணி-II)**

வங்கியியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகுதிகளில் ஏதாவது ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த.உயர்தரத்தில் 03 பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தேசிய தொழில்.தகைமை மட்டம்-4(NVQ-4) இனை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**கற்கைநெறிக்கான காலம்**- ஒரு வருடம் (இரண்டு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்)

| | | |
|---|---|---|
| **கற்கைநெறி மொழி** | - | தமிழ் |
| **கற்கைநெறிக்கான கட்டணம்** | - | ரூபா. 70,000.00 |
| விண்ணப்பப்படிவம் | | ரூபா 1,000.00 |
| பதிவுக் கட்டணம் | | ரூபா 2,000.00 |
| கல்விக் கட்டணம் | | ரூபா 60,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | | ரூபா 6,000.00 |
| நூலகக்கட்டணம் (திரும்பப்பெறத்தக்கது) | | ரூபா 1,000.00 |

**இக் கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவத்தினை** www.codl.jfn.ac.lk எனும் இணையதளத்தின் https://forms.gle/hwpehtr6ucD85b8AA இணைப்பின்வழி பூர்த்தி செய்து உயர்தர கல்வித்தகைமை (A/L) சான்றிதழ் பிரதியையும் விண்ணப்பக் கட்டணம் 1000/= இற்கான வங்கிப் பற்றுச்சீட்டின் பிரதியையும் தரவேற்றம் செய்து 10.06.2023 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**பதிவாளர்** (C-6528)


# கப்பல் இழப்பீட்டுக்காக வெளிநாட்டு நீதிமன்றம் செல்லும் அரசு

### ஆட்சியாளர்களின் இனவாத முகத்தை உலகுக்குக் காட்டும் செயல்-சுமந்திரன் எம்.பி



(கொழும்பு)

"உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது சர்வதேச பொறிமுறையாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் குழு அமைப்பதில் பயன் இல்லை."என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத் தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

2009 ஆம் ஆண்டு இதே காலப் பகுதியில்தான் மிக மோசமான படுகொலைகள் அரசால் அரங்கேற்றப்பட்டன. இன்றைக்கும் சர்வதேச நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களுக்கு,நாங்கள் சர்வதேசம் செல்லத் தயாரில்லை எனவும், உள்நாட்டு பொறிமுறைக்கமைய விடை கொடுப்போம் எனவும் கூறி வரும் அரசு இன்னும் ஒரு விடையையும் கொடுக்காமல் உள்ளது.

ஆனால், இழப்பீட்டுக்காக வெளிநாட்டு நீதிமன்றத்துக்குச் செல்கின்றது. இது உங்களுடைய (ஆட்சியாளர்களின்) இனவாத முகத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது என்றும் சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டார். (நி)

# இராசிபலன்

**12.05.2023**
சித்திரை 29, வெள்ளிக்கிழமை
சப்தமி முற்பகல் 10.49 மணிவரை
திருவோணம் பிற்பகல் 2.43 மணிவரை

சுபநேரம்-5.54-7.24 மணிவரை
இராகுகாலம்-10.24-11.54 மணிவரை
நடேசர் அபிஷேகம்
சந்திராஷ்டமம்-

திருவாதிரை, புநர்பூசம்
உலக செவிலியர் தினம்

**வளவன்**

**மேஷம்**
ஒளிமயமான எதிர்காலத்திற்கு திட்டம் தீட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**கடகம்**
நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம் பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**
செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்**
உடல் நலனால் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொட்ட காரியங்கள் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**ரிஷபம்**
குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்**
சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டில் நம்பிக்கை கூடும்.

**கும்பம்**
உறவினர்கள் சந்திப்பால் திடீர் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்**
எந்தக் காரியத்திலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி**
மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்கள் தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு**
செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**மீனம்**
இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

பகைவர்கள் மீது எப்போதும் நம்பிக்கை வைக்காதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திலீபனின் நினைவுத் தூபி முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்ததுடன் கஞ்சி வழங்கும் நிகழ்வு நல்லூரில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி முன்பாக, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கொல்லப்பட்ட மக்களுக்கு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் முன்பாக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது. (4-6-60)

# யாழ். மாவட்டத்தில் அடுத்த வாரம் நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டம்

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியில் டெங்கு நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து செல்வதினாலும் யாழ் மாவட்டம் சிவப்பு அபாய மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாலும் ஜனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய, மாகாண, மாவட்ட, நிறுவன, கிராமிய மற்றும் வீடுகள் மட்டத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்செயற்பாட்டிற்கு அரசு, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் வணக்கஸ்தலங்களின் தலைவர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்போதய அறிக்கையின்படி யாழ் மாவட்டத்தில் இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 1160 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டதுடன் டெங்கு நோயினால் 01 இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் வழமைக்கு மாறான மழை காரணமாக டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் அதிகரிப்பதற்கான அபாயநிலை காணப்படுகின்றது.

அத்துடன்நாட்டின்ஏனைய பகுதிகளில் டெங்குநோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதனால் குடாநாட்டில் டெங்கு நுளம்பு பரவுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றது. இந்நிலையில் உடனடியாக நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையினை முன்னெடுக்கும் முகமாக மே மாதம் 16 மற்றும் 17ம் திகதிகளில் யாழ் மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.(4-6-90)

# நாவற்குழி கிழக்கு விவசாயிகளை பதிவு செய்ய நடவடிக்கை

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட பகுதிகளில் 2023/2024 ஆண்டு நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான பதிவுகள்நாளை சனிமற்றும்நாளை மறுதினம் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நாவற்குழி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அரச உரம் மற்றும் மானியங்களை பெற்றுக்கொள்வதற்கான மேற்படி பதிவுகளை மேற்கொள்ள வரும் விவசாயிகள் நடப்பு ஆண்டிற்கான ஏக்கர்வரிச் சிட்டை,குடும்ப அட்டை,தேசிய அடையாள அட்டையும்-புதிதாக பதிவுகளை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் பரப்பளவை உறுதிப்படுத்தும் ஆவணம் ,குத்தகை மற்றும் காணிக் கொள்வனவு தொடர்பான ஆவணங்களுடன் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4-6-30)



மாண்புறு மாணவ சமுதாயம்" எனும் கருப்பொருளில் ஆளுமை மிக்க மாணவர் சமூகத்தினை உருவாக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட திறன் விருத்திப்போட்டி - 2023 இன் சுவரொட்டிசித்திரப்போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி மாணவி செல்வி கு.சுஜீத்திரா மற்றும் பேச்சுப்போட்டியில் அதே பாடசாலையை சேர்ந்த மாணவி செல்வி மு.சங்கவி ஆகியோர் முதல் இடத்தை பெற்றுக் கொண்டனர்.






யா/மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் mother ஸ்ரீ தேசிய மாகாண விருதுக்கான பாராட்டு விழா கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை விவேகானந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கண்புரை சத்திரசிகிச்சை தேவைப்படுபவர்களுக்கான அடுத்த கட்ட சத்திரசிகிச்சைமுகாம் யாழ்.போதனா வைத்திய சாலையில் கண் சத்திர சிகிச்சைநிபுணர் வைத்திய கலாநிதி மலரவனால் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இச்சத்திர சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கீழ்க்குறிப்பிடும் வைத்தியசாலைகளுக்கு சமூகந்தர வேண்டும்.

அந்தவகையில் வேலணை பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வேலணை பிரதேச வைத்தியசாலைக்கும் காரைநகர் பிரதேசத்தில் இருந்து சத்திர சிகிச்சைக்காக தெரிவுசெய்யப்பட்டவர்கள் காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கும் புங்குடுதீவு பிரதேசத்தில் இருந்து சத்திரசிகிச்சைக்கா தெரிவு செய்யப்பட்டவர்கள் புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலைக்கும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில். இருந்து சத்திர சிகிச்சைக்கா தெரிவு செய்யப்பட்டவர்கள் ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலைக்கும் சமூகந்தர வேண்டும்.

அங்கிருந்து இவர்களை யாழ்.போதனாவைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல இலவச போக்குவரத்துவசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்குப் பின்னர் இவர்களை மீள அந்தந்த வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட நோயாளர்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் தொலைபேசி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே தெரிவுசெய்யப்பட்ட நோயளர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்கு உரிய நேரத்தில் சமூகந்தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு [illegible] பாளர் அறிவித்துள்ளார்.(4-6)

# உள்ளூராட்சி நிறுவனங்களிடம் முறையிட முறைப்பாட்டிலக்கம்

(யாழ்ப்பாணம்)

வட மகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏதேனும் முறைப்பாடுகள் காணப்படின் வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் Hot Line இலக்கமான "070 - 7213728" என்ற இலக்கத்திற்கு தொலைபேசி ஊடாகவும், whatsapp, Viber மூலமும் 24 மணி நேரமும் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவித்து கொள்ள முடியும் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

(4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளில் இலங்கை ஈடுபடாது - ரணில்



(கொழும்பு)

ஆசியாவின் சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய எதற்கும் இலங்கை உதவிகளை வழங்காது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிய பூகோள அரசியலுக்கும் பசுபிக் பிராந்திய வலய அரசியலுக்கும் இடையில் பாரியளவில் வித்தியாசங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வித்தியாசங்களை கண்டறிந்து கொண்டு சமாதானத்தையும், ஸ்திரத்தன்மையையும் உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

எதிர் வரும் இரண்டாண்டு தசாப்த காலப் பகுதியில் இலங்கையை பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையச் செய்ய அணிசேரா கொள்கைகளை பின்பற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 140 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 150 | 180 |
| தக்காளி | 350 | 500 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 180 |
| கோவா | 240 | 200 | 250 | 250 |
| கரட் | 160 | 180 | 150 | 250 |
| பூசணி | 60 | 40 | 50 | 80 |
| புடோல் | 120 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 120 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 450 | 350 |
| வெண்டக்காய் | 120 | 140 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 280 | 260 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 160 | 240 | 280 |
| கறிமிளகாய் | 350 | 150 | 250 | 320 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 500 | 500 | 550 |
| கத்தரிதம்புள்ள | 160 | 80 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 100 | 200 |
| தேசிக்காய் | 450 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 400 | 500 |
| முள்ளங்கி | 100 | 100 | 140 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | -- | 150 | -- |

## சவுதிபாராளுமன்ற நட்புறவுச்சங்க தலைவராக அமைச்சர் நஸீர்

(கொழும்பு)

இலங்கை.சவூதி பாராளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்பதவிக்கு இவர் தெரிவாகியுள்ளமை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துமென நம்பப்படுகிறது.

இலங்கையின் பொருளாதார மேம்பாடுகளுக்கு சவூதி உட்பட்ட அரபு நாடுகளின் ஒத்துழைப்பை பெறவும் இவரது தெரிவு வழிகோலும். கால நிலைச் சவால்களை எதிர்கொள்ளும் பக்குவம் மற்றும் உள்நாட்டுக் கனிய வளங்களை சர்வதேச சந்தைப்படுத்தும் வியாபார வியூகங்கள் குறித்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)


நடேஸ்வர அன்னையின் வாழ்த்துகள்

சேவை நலன் பாராட்டு

செல்வி. சாந்தி சிவப்பிரகாசம்

(பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர்)

சேவை விபரம்:-

1.யா/.இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
1988.08.17-1991.12.31

2.யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
1992.01.01-1993.12.31

3.யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்
1994.01.01-1995.12.31

4.கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை
1996.01.01-1997.04.23

5.மு/பாலிநகர் மகாவித்தியாலயம்
1997.04.24-1999.05.31

6.வவு/கந்தபுரம் வாணி வித்தியாலயம்
1999.06.01-2013.03.05

7.வவு/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்
2013.03.06-2015.04.05

8.யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்
2015.04.06-2023.05.09

9. யா/மயிலணி மகா வித்தியாலயம்
2016.07.15-2019.03.25(இருபாடசாலை)

10. யா/நடேஸ்வரக்கல்லூரி
2019.03.26-2023.05.09(இருபாடசாலை)




கல்விச் சேவையில் 35 வருடங்கள் ஆசிரிய பணியாற்றி 10.05.2023 அன்று மணிவிழாக்காண்ட செல்வி.சாந்தி சிவப்பிரகாசம் அவர்கள் ஓய்வுக் காலத்தில் சகல வளங்களும் பெற்று நீடுழி காலம் வாழ அன்னை புவனேஸ்வரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
யா/நடேஸ்வரக் கல்லூரி.


## அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம் -ஆனைக்கோட்டை

வட்டாரம் -11
ஆதன இலக்கம் -04
கொத்துக்கட்டி வீதி 2 ஆம் ஒழுங்கை.
18.04.2023.

வட்டாரம் 11, கொத்துக்கட்டி வீதி 2 ஆம் ஒழுங்கை. ஆதன இலக்கம் 04 இல் அமைந்துள்ள இவ்வாதனமானது உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி. சண்டிலிப்பாய், கோயிற்பற்று. நவாலி தெற்கு இறை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, நவாலி தெற்கு (J/136) கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட "சிறுமலை புனாஒடை சுடலைப்பிட்டி" எனும் பெயருள்ள ஆதனத்தின் விஸ்தீரனமானது நிலப்பரப்பு 02. குளி 02 ஆகவும், சட்டத்தரணி நாகலிங்கம் அரியபுத்திரன் முகதாவில் நிறைவேறிய 3434 ஆம் இலக்க 22.06.2023 ஆம் திகதிய அறுதி உறுதிப்படி மானிப்பாயைச் சேர்ந்த மகாலிங்கம் மோகனகுமார் என்பவரால் றெஜின் பெண் றஜினி என்பவருக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகத்தில் (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாதனத்தின் தாய் உறுதியானது சட்டத்தரணி இ.சபேசன் முகதாவில் நிறைவேறிய 6048 ஆம் இலக்க 10.06.2015 ஆம் திகதிய அழியா நன்கொடை உறுதிப்படி, சின்னத்தம்பி நாகையா என்பவரால் கோபாலரத்தினம் தர்மகுமார் பெண் குமுதினி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் எமது ஆதனப்பதிவேட்டின்படி. கந்தையா சின்னத்துரை என்பவர் பெயரில் காணப்படுகிறது. நிலஅளவையாளர் V.தவராஜா என்பவரால் 28.06.2021 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2914 ஆம் இலக்க நில அளவை படத்தின் படி துண்டு 01 எனச் சுட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 02 குளி 02 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால், அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரித்த திகதியிலிருந்து 14 நாட்களிற்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து றெஜின் பெண் றஜினி என்பவர் பெயரில் மேற்குறித்த ஆதனப் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் பெயர்மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி ஆகாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**
(14079)

### வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
### ஆதனப் பெயர்மாற்றம்
### 19, வைரவர் கோவில் 1ஆம் ஒழுங்கை, வட்டாரம் -13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் -13. வைரவர் கோவில் 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 19 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் "சின்னப்பு சின்னத்தம்பி" என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை சின்னத்தம்பி வீரசிங்கம் ஆகியவர் தனது பிதா காலஞ்சென்ற சின்னப்பு சின்னத்தம்பி ஆகியவரால் 60 வருடங்களாக ஆட்சி செய்யப்பட்டுவரப்பட்டதென்றும் அவரின் பின்னர் குறித்த ஆதனத்தினை 45 வருடங்களாக எவ்வித குறுக்கீடுகளோ.ஆட்சேபனைகளோ, தடைகளோ இல்லாமல் தன்னால் ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகின்றது என்றும் குறித்த மூல உறுதி கடந்த கால வன்செயல்களின்போது இடம்பெயர்ந்து சென்றபொழுது தொலைந்துவிட்டது என்றும் அதனை யாழ்ப்பாணம் காணிக்கந்தோரில் எடுப்பதற்கு முயற்சிகள் செய்தும் அதனை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் குறித்த ஆதனத்தை தான் ஆட்சிசெய்தும், பாதுகாத்தும் வருவதனால் தனது பிதாவழி முதுசமானது எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 4992/30.01.2005 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

வீரசிங்கம் குணசிங்கம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4993/ 30.01.2005 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்தம்பி வீரசிங்கம் ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வைத்திலிங்கம் இரத்தினசிங்கம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5789/ 23.07.2006 ஆம் இலக்க உறுதியால் குறித்த வீரசிங்கம் குணசிங்கமும் சின்னத்தம்பி வீரசிங்கமும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த வைத்திலிங்கம் இரத்தினசிங்கம் ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வைத்திலிங்கம் இரத்தினசிங்கம் ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(14088)

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 142

# பலவீனத்தையே பலமாக மாற்ற முடியுமா?



மனோதத்துவ வல்லுநர் ஒருவர் சிறப்பு அழைப்பாளராக பாடசாலைக்கு வந்திருந்தார்.

அதன் பிறகு ஒரு வகுப்பறைக்குள் அவர் சென்ற வேளை மாணவர்கள் இந்த நபர் ஏதோ பெரிய பிரசங்கத்தை எடுத்து கடுப்பேத்தப்போகிறார் என நினைத்தனர்.

வல்லுனர் குடிக்க தண்ணீர் கொண்டு வருமாறு தன் உதவியாளரிடம் சொன்னார்.

அவரும் ஒரு கண்ணாடி டம்ளரில் குடிநீர் கொண்டு வந்தார். வல்லுநர். "நான் பெரிதாக உங்களிடம் எதுவும் பேசப்போவதில்லை.

இந்த குடிநீர் டம்ளரை வைத்து ஒரு சின்ன பரிசோதனை செய்யப்போகிறோம்" என்றார். மாணவர்கள் குழம்பிப் போயினர். இது என்ன வேதியியல் வகுப்பா?. இவர் இதை வைத்து என்ன பரிசோதனை செய்யப் போகிறார்?. என ஆவலுடன் காத்திருந்தனர். ஒரு மாணவனை தன் அருகே அழைத்தார்.

கையை நீட்டச் சொல்லி அவன் கையில் அந்த தண்ணீர் டம்ளரை வைத்தார். " "எவ்வளவு பாரமாக இருக்கிறது?" எனக் கேட்டார். மாணவன் இது ஒன்றும் பாரமில்லை என்றான். அப்படியே வைத்திருக்குமாறு சொல்லிவிட்டு தன் கையில் இருந்த புத்தகத்தை படிக்க ஆரம்பித்துவிட்டார்.

பத்து நிமிடம் ஆனவுடன் அந்த மாணவனிடம் " டம்ளர் பாரமாக இருக்கிறதா?" எனக் கேட்டார். "ஆமாம்.. கொஞ்சம் பாரமாக ஆகிவிட்டது" என மாணவன் சொன்னான். அரைமணி நேரம் கையில் வைத்திருந்தவன் "கைகள் இந்த பாரத்தை சுமக்கும் வலிமையை இழந்துவிட்டது" எனச் சொல்லி டம்ளரை கீழே வைத்துவிட்டான்.

வல்லுநர் மாணவர்களிடம் "ஒரு மணி நேரம் இந்த டம்ளரை கையில் வைத்திருந்தால் என்ன ஆயிருக்கும்.." என கேட்டார். மாணவர்கள் "அந்த டம்ளரின் எடை ஒரு டன் அளவிற்கு கூடியிருக்கும் "என்றனர்.

"ஒரு நாள் வைத்திருந்தால்..?"அந்த பாரம் நம்மை அழுத்தியிருக்கும்" "இரண்டு நாள் வைத்திருந்தால்..?" "மயங்கி கீழே விழுந்திருப்போம். மருத்துவமனைக்கு செல்லும் நிலை வந்திருக்கும்" என்றனர்.

வல்லுநர் சொன்னார். "ஒரே எடை கொண்ட டம்ளர் எப்படி தன் பாரத்தைக் கூட்டிக்கொண்டே போனது எனப் பார்த்தீர்களா?. உங்களால் சுலபமாக தூக்கக்கூடிய பொருள் கூட உங்களை வென்று விடுகிறதல்லாவா!. அதனால் மிக சாதாரணமான எண்ணங்கள் என நினைத்து நீங்கள் முதலில் சேர்த்து வைக்கிறீர்கள். அதுவே நாட்கள் செல்ல செல்ல பாரம் கூடி உங்களையே அழித்து விடுகிறது" என்றார்.

மாணவர்கள் கைதட்டி அவர் கருத்தை வரவேற்றனர். அதனால் எல்லா எண்ணங்களையும் அதன் முதல் கட்டத்திலேயே இறக்கி வைத்துவிடுங்கள். அப்போது தான் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவீர்கள்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# நைஜீரியா படகு விபத்து 15 சிறுவர்கள் உயிரிழப்பு

(நைஜர்)

நைஜீரியா நாட்டின் வடமேற்கு மாநிலம் சொகோடோ அருகே படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் சிக்கி 15 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன், பலர் மாயமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

சொகோடோ அருகே இருக்கும் பகுதி ஒன்றில் விறகு சேகரிக்க 20 இற்கும் மேற்பட்டோர் படகில் கிளம்பியுள்ளனர்.

படகில் சிறுவர் குழந்தைகள் உள்ளிட்டோரும் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த படகு ஆற்றின் நடுவே சென்றுக்கொண்டிருந்த போது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் 13 சிறுமிகள், 2 சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம் பெருமளவிலானோர் காணாமல் போயுள்ள நிலையில், உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணியாளர்கள் களப்பணிகளில் ஈடுபட்டுள்ளதுடன், இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (ஞி)

# ரஷ்யா...

* 21 பேர் உ...
* பலி எண்ண...
* அவசர நி...

(மொஸ்கோ)—

காட்டுத்தீயில் சி...

சோகத்தை ஏற்படு...

இச்சம்பவம் ரஷ்யாவில் இடம் பெற்றுள்ளது.

இந்த காட்டுத்தீயானது ரஷ்யா மற்றும் சைபீரியா வின் எல்லை

## பிளஸ் 2 பொதுத்தேர்வில்

# அனைத்து பாடங்களிலும் 100 புள்ளிகள் பெற்று சாதனை



(சென்னை)

தமிழகம் மற்றும் புதுவையில் நடைபெற்ற பிளஸ்2 பொதுத் தேர்வை 8 லட்சத்து 3 ஆயிரத்து 385 பேர் எழுதினார்கள்.

இதில் 4 லட்சத்து 21 ஆயிரத்து 13 மாணவிகளும், 3 லட்சத்து 82 ஆயிரத்து 371 மாணவர்களும் தேர்வை எழுதி இருந்தார்கள்.

இத்தேர்வு முடிவுகள் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இதில் 600 இற்கு 600 மதிப்பெண் பெற்று திண்டுக் கல்லை சேர்ந்த மாணவி சாதனை படைத்துள்ளார்.

திண்டுக்கல் அண்ணா மலை பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் வணிக வியல் பாடப்பிரிவை தேர்ந் தெடுத்து படித்த மாணவி நந்தினி அனைத்து பாடங்களிலும் 100 இற்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளார். (ஞி)

# பாகிஸ்தானில் மோதல்களால் 8 பேர் பலி, 290 பேர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கைது செய்யப்பட்ட பின்னர் நடந்த மோதல்களால், இதுவரை சுமார் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரிஜ கட்சியின் தலைவரான இம்ரான் கான், லஞ்சக் குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

அதையடுத்து அவரின் ஆதரவாளர்கள் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், சுமார் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 290 பேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யாவில் காட்டுத்தீ பரவல்

## ... உயிரிழப்பு

## ...ண்ணிக்கை உயரலாம் என அச்சம்

## ... நிலை பிரகடனம்

(...ா)

**...யில் சிக்கி 21 பேர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பெரும் ...ற்படுத்தியுள்ளது.**



...யில் அமைந்துள்ள யூரல் மலைப் பகுதியில் திடீரென ஏற்பட்டுள்ளது.

இதனால் ரஷ்யாவின் குர்கான் மற்றும் சைபீரியா வின் டியூமென், ஓம்ஸ்க் ஆகிய மாகாணங்களில் உள்ள பல கிராமங்கள் தீப் பிடித்து எரிந்துள்ளன.

அதனால், ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகள், ஆயிரக்கணக்கான ஹெக்டேயர் விவசாய நிலங்கள் போன்றன சேதம் அடைந்ததாக கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த தீ விபத்தில் சிக்கி 21 பேர் உயிரிழந்துள்ளனர். அங்கு தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் பலி எண் ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகின்றது.

மேலும் காட்டுத்தீ ஏற்பட்ட பகுதிகளில் அவசர நிலை உத்தரவை அந்நாட்டு அரசாங்கம் பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது. (ஙி)

# 2020 ஆம் ஆண்டில்1.34 கோடி குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறந்துள்ளன-ஐ.நா தகவல்

(ஜெனீவா)

கடந்த 2020 ஆம் ஆண் டில் உலகம் முழுவதும் 1.34 கோடி குழந்தைகள் குறைப் பிரசவத்தில் பிறந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாப னம், ஐக்கிய நாடுகள் சபை குழந்தைகள் நிதியம் (யுனி செப்) மற்றும் தாய்-சேய், குழந்தைகள் சுகாதார கூட்டமைப்பு ஆகியவை இணைந்து "குறைப்பிரசவ குழந்தைகள்" என்ற தலைப்பில் ஒரு ஆய்வை நடத் தின.

அதில் கடந்த 2020 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் 1.34 கோடி குழந்தைகள் குறை பிரசவத்தில் பிறந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளில் 45 சதவீதம் பேர் இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா, சீனா மற்றும் எத்தியோப்பியா ஆகிய 5 நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

2010 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில் போர், கால நிலை ம்ாற்றம், கொரோனா வைரஸ் மற்றும் விலைவாசி உயர்வு ஆகிய 4 முக்கிய காரணிகள் பெண்கள் மற்றும் குழந்தைகளை அதிக அளவில் பாதித்துள்ளன.


உதாரணமாக, காற்று மாசு காரணமாக ஆண்டுக்கு 60 இலட்சம் குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறப்பது தெரியவந்துள்ளது.

குறைப்பிரசவத்தில் பிறந்த 10 இல் ஒரு குழந்தை மனித உரிமை நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 10 நாடுகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

காலநிலை மாற்றம் கர்ப்பிணிகள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துவது அதிகரித்து வருகிறது.

எனவே, காலநிலை மாற்றம் உள்ளிட்ட இடர்பாடுகளை தவிர்க்க கூடுதல் முதலீடு தேவைப்படுகிறது.

மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் கொள்கைகள் வகுக்கப்பட வேண் டியது அவசியம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஙி)



...காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை சுமார் 1900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப்பின் லாகூர் இல்லமும் பிரிஜ கட்சி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரிஜ கட்சியின் உபதலைவர் பவாத் சௌத்தி, செயலாளர் நாயகம் அசாத் உமர் ஆகியோரும் கைது செய்யப் பட்டுள்ளனர். (ஙி)

# புனித யாத்திரையில் துப்பாக்கிச் சூடு ஐந்து பேர் உயிரிழப்பு

## துனிசியாவில் துயரம்

(துனிஸ்)

துனிசியாவில் யூதர்களின் புனித யாத்திரையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பிரான்ஸ் நாட்டவர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

துனிசியா நாட்டின் மத்திய தரைக்கடல் தீவான டிஜெர்பாவில் யூதர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இங்குள்ள பழமை வாய்ந்த தேவாலயத்தில் புனித யாத்திரை நடந்தது. இதில் உலகின் பல நாடுகளில் இருந்தும் யூதர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது அங்கு பாதுகாப்புக்காக நின்று கொண்டிருந்த கடற்படை பொலிஸார் ஒருவர் திடீரென துப்பாக்கி சூடு நடத்தினார். இதனால் அங்கிருந்தவர்கள் பயத்தில் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இந்தத் துப்பாக்கி சூட்டில் ஒரு கடற்படை பொலிஸார் உட்பட 5பேர் உயிரிழந்தனர்.

மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவரும் உயிரிழந்ததாக துனிசிய வெளியுறவு அமைச்சகம் கூறி உள்ளது. இதனையடுத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்ன? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# ஈர்ப்புவில்லைகள்

அகிலமானது எவ்வாறு உருவாகியது என்பதனைக் கண்டறிவதற்கு நாம் அதிதொலைவிலுள்ள உடுத்தொகுதிகளைப் பற்றி ஆராய வேண்டியது அவசியமாகின்றது. இவ் உடுத்தொகுதியிலிருந்து வெளிவிடப்படும் ஒளியானது பில்லியன் ஆண்டுகள் அண்டவெளியில் பயணித்து நம்மை அடைவதனால் இவை மிகவும் மங்கலாகவே தென்படும். இவற்றை அதிநவீன தொலைக்காட்டிகளின் உதவியுடன் அவதானிப்பதே மிகவும் கடினமானது.


அதிஸ்டவசமாக இயற்கையே நமக்கு ஈர்ப்புவில்லைகளைக் கொடையாக வழங்கியுள்ளது. இக்கட்டுரையானது ஈர்ப்புவில்லை என்றால் என்ன அவை எவ்வாறு உருவாகின்றன என்பதனையும், அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் விளக்குகின்றது. ஜன்ஸ்டீனின் பொதுச்சார்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அண்டவெளியில் விண்வெளி (space). நேரம் (time) என்பன இணைந்து விண்வெளி நேரத்தினை (space-time) உருவாக்குகின்றது. ஈர்ப்பின் காரணமாக பாரமான பொருளானது விண்வெளி நேரத்தில் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வளைவை உருவாக்குகின்றது.

இது திருப்பப்பட்ட விண்வெளி நேரம் (warped spacetime) என அழைக்கப்படும். இவ்வளைவானது அதன் திணிவில் தங்கியுள்ளது. பாரமானபொருள் அதிக வளைவையும் பாரம் குறைந்த பொருள் சிறிய வளைவையும் உருவாக்கும். அண்டவெளியில் காணப்படும் அதிக பாரமுள்ள விண்பொருட்களான உடுக்கள் (stars), உடுத்தொகுதிகள் (galaxies), கோள்கள் (planets), துணைக்கோள்கள் (moons), கருந்துளைகள் (black holes) போன்ற பாரம் கூடியவிண்பொருட்களின் ஈர்ப்பு காரணமாக விண்வெளி நேரமானது வளையும். 1915 ஆம் ஆண்டு ஜன்ஸ்டீன் பொதுச் சார்புக் கோட்பாட்டுக்கான கணிதக் கோவைகளை வெளியிட்டார்.

ஒளி பொதுவாக நேர்கோட்டில் பயணம் செய்யும். ஆனால் ஒளியின் பாதையானது விண்வெளி நேரத்தின் வளைவு காரணமாக உரு1 (i) இல் காட்டப்பட்டுள்ளவாறு வளைந்து செல்லும் என்பதனை ஜன்ஸ்டீன் பொதுச்சார்புக் கோட்பாட்டின் மூலம் வெளிப்படுத்தினார்.

ஜன்ஸ்டீனின் கோர்ட்பாட்டினால் வானியலிலும் அண்டவியலிலும் பாரியமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதனை வானியலாளரான எடிங்டன் (Arthur Stanley Eddington) விளங்கிக் கொண்டார். இக் கோட்படுகளை பரிசோதனை ரீதியாக பூரண சூரிய கிரகணத்தின் போது உறுதிப்படுத்த முடியும் எனக் கருதினார். சூரியனுக்கு அருகிலிருக்கும் தொலைதூர விண்மீன் திரள்களை சூரியனின் பிரகாசம் காரணமாக அவதானிக்க முடியாது. ஆனால் பூரண சூரிய கிரகணத்தின் போது சந்திரனானது சூரிய ஒளியை மறைப்பதால் சூரியன், சந்திரன் என்பன ஒரே நேர்கோட்டில் இருக்குமிடத்திலிருந்து அவதானித்தால் சூரியனுக்கு அருகிலிருக்கும் உடுக்களை அவதானிக்கக் கூடியதாயிருக்கும்.

1919ஆம் ஆண்டு நடைபெற்ற பூரண சந்திரகிரகணம் இவர்களின் ஆய்விற்குச் சாதகமாக அமைந்தது. அன்று சூரியனானது Hyades எனப்படும் பிரகாசமான உடுத்தொகுதிக்கு முன்னால் இருக்கும். கிரகண வலயத்திற்குள் அதிகளவான பிரகாசமான நட்சத்திரங்கள் காணப்படும்.




உரு1: ஜன்ஸ்டீனின் ஈர்ப்பு வில்லைச் செயற்பாடு (I): திருப்பப்பட்ட விண்வெளிநேரம் (II) ஜன்ஸ்டினின் ஒளி வளையம்

Hyades இல் காணப்படும் பிரகாசமான உடுக்களின் நிலையை சூரிய கிரகணத்தின் போதும் சூரியன் இல்லாத வேளையிலும் ஒப்பிடுவதன் மூலம் ஒளி வளைவடைகின்றது என்பதனை உறுதிப்படுத்த முடியும் எனக் கருதினார். அதாவது சூரியன் இல்லாத வேளையில் விண்வெளி நேரத்தில் எந்த மாற்றமும் இருக்காது. ஆனால் சூரியன் நடுவில் இருக்கும் போது விண்வெளி நேரமானது சூரியனின் ஈர்ப்பு காரணமாக வளைந்திருக்கும். இதனால் உடுக்களில் நிலை மாற்றம் ஏற்படும். ஆனால் சூரியனின் பிரகாசம் காரணமாக இதை அவதானிக்க முடியாது. அரிதான பூரண சூரிய கிரகணத்தின் போது மட்டுமே உடுத்தொகுதியின் இடப்பெயர்வினை அவதானிக்கலாம்.

1919 ஆம் ஆண்டு நடைபெற்ற பூரண சூரிய கிரகணத்தின் போது உடுக்களின் நிலை மாற்றத்தினை எடிங்டனும் டைசனும் (Frank Watson Dyson) உறுதிப்படுத்தினார்கள். ஆனால் அந்நேரம் விஞ்ஞானிகள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் அதன் பின்னர் நடைபெற்ற பல சூரிய கிரகணத்தின் போதும் உடுக்களின் நிலை மாற்றத்தினை ஒப்பிட்டதன் மூலம் ஒளி வளைவடைந்து செல்வது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1936 ஆம் ஆண்டு ஜன்ஸ்டீன் மிகவும் பாரமான விண்பொருட்கள் அதாவது உடுத்தொகுதிகள், கருந்துளைகள் என்பன விண்வெளி நேரத்தில் ஏற்படுத்தும் வளைவினால் ஒளியின் பாதையில் ஏற்படும் வளைவின் காரணமாக பாரமான விண்பொருட்கள் வில்லை போன்று செயற்படும் என்பதனைப் பிரேரித்தார். இச் செயற்பாடே ஈர்ப்பு வில்லைத் தத்துவமாகும்.

அதிதொலைவிலுள்ள ஒளி முதலிலிருந்து வெளிவிடப்படும் ஒளியானது திரும்பலடைந்த விண்வெளி நேரம் காரணமாக வளைந்து தொலைக்காட்டியை அடைவதற்கான இருபரிமான வரைபடம் உரு 1 (i) இல் காட்டப்பட்டுள்ளது. இங்கு உடுத்தொகுதியானது ஈர்ப்பு வில்லையாகச் செயற்படுகின்றது என்று கருதினால், ஒளியானது எல்லாப் பக்கத்தாலும் வளைவடைந்து தொலைக் காட்டியை வந்தடையும்.

தொலைக் காட்டியை வந்தடையும் ஒளியானது உடுதொகுதியின் திசையமைப்பில் (orientation) தங்கியுள்ளது. சாதாரண ஒளி வில்லையுடன் ஒப்பிடும் போது ஈர்ப்புவில்லையின் செயற்பாடு சிறிதளவு மாறுபடும். ஒளிவில்லையில் தொலைதூர முதலிலிருந்து வரும் ஒளியானது ஒரு நிலையான குவியத்திலேயே குவிவடையும்.

ஆனால் ஒளியானது ஈர்ப்பு வில்லையைக் கடக்கும் போது அதாவது உடுத்தொகுதியைக் கடக்கும் போது, உடுத்தொகுதிக்கு அருகில் வரும் ஒளி கூடிய வளைவையும் உடுத்தொகுதியிலிருந்து சற்றுத் தொலைவில் வரும் ஒளியானது குறைந்த வளைவையும் உருவாக்கும்.

இதனால் பல குவியங்களைக் கொண்டிருக்கும். இதன்காரணமாக ஈர்ப்பு வில்லையிலிருந்து பல்வேறு விம்பங்கள் உருவாகும். ஈர்ப்புவில்லையானது சீராக பரம்பலடைந்த உடுத்தொகுதியாகவும், ஒளிமுதல், ஈர்ப்புவில்லை, தொலைக்காட்டி என்பன ஒரே பார்வைக் கோட்டிலிருக்குமாயின் ஒளியானது சீராக வளைவடைவதனால் வளைய வடிவமுள்ள ஒளி வளையத்தை உருவாக்கும். இது ஜன்ஸ்டீன் வளையம் (Einstein Ring) என அழைக்கப்படும். இச்செயற்பாடு உரு 1 (ii) இல் காட்டப்பட்டுள்ளது. ஒளிமுதல், ஈர்ப்புவில்லை, தொலைக்காட்டி என்பன ஒரே பார்வைக் கோட்டில் இல்லாமலிருக்குமாயின் அல்லது பரந்த உடுத்தொகுதியாயிருப்பின் ஒரே ஒளி முதலிலிருந்து வெளிப்படும் பல விம்பங்களை அவதானிக்கக் கூடியதாயிருகும். அதிதொலைவிலுள்ள உடுத்தொகுதிகள், உடுக்கள், Quasar போன்றவற்றை Hubble, James webb telescope என்பனபடம் பிடிப்பதற்கு இயற்கையின் கொடையான ஈர்ப்புவில்லைச் செயற்பாடே உதவியது என்றால் மிகையாகாது. ஈர்ப்புவில்லை விளைவின் காரணமாக ஏற்படும் ஒளிவிலகலை அளவிடுவதன் மூலம் ஈர்ப்புவில்லையாகத் தொழிற்படும் உடுத் தொகுதியின் திணிவையும் அளவிடமுடியும். அதுமட்டுமன்றி சூரிய மண்டலத்திற்கு வெளியே காணப்படும் கோள்களைக் கண்டறிவதற்கும், Dark matter ஐக் கண்டறிவதற்கும் ஈர்ப்புவில்லை பயன்படுத்தப்படுகின்றது.

**சுதர்சினி உபேந்திரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**பௌதிகவியல் துறை,**
**விஞ்ஞானபீடம்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் மாயமான மாணவர்கள் அநுராதபுரத்தில் இருந்து மீட்பு



(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள குருமடம் ஒன்றில் தங்கி கல்வி கற்று வந்த மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் காணாமல்போன நிலையில் நேற்று முன்தினம் அநுராத புரத்தில் மீட்கப்பட்டுள்ளார்.

செட்டிக்குளம் மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வரும் குறித்த இரு மாணவர்களும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்குச் சென்று வருவது வழமை கடந்த திங்கட்கிழமை பழுதடைந்த துவிச்சக்கர வண் டிக்கு டயர் வேண்டுவதற்காக சென்றவர்கள் நீண்ட நேரமாகி யும் விடுதிக்குத் திரும்பவில்லை.

அதன் பிறகு இரவு எட்டு மணியளவில் குறித்த விடுதி யின் காப்பாளர் காணாமல் போன மாணவனின் பெற்றோ ருக்கு தொடர்பு எடுத்து மகன் வீட்டுக்கு வந்தாரா என்று கேட் டுள்ளனர்.

குறித்த பெற்றோர்கள் ஏதே னும் பிரச்சினையா என்று கேட்ட போது விடுதி காப்பாளர்களால் குறித்த விபரங்கள் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக விடுதிபங்குத் தந்தையர்களால் மாங்குளம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டதுடன் சமூக வலைத் தளங்களிலும் இவ் இரு மாண வர்களினது புகைப்படங்களும் பகிரப்பட்டன.

இந்நிலையில் இரண்டு நாட் களின் பின்னர் நேற்று முன்தினம் இவ் இரு பாடசாலை மாணவர்களும் அநுராதபுரம் பகுதியில் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களை யாரேனும் கட த்திச்சென்றார்களா அல்லது அவர்களாகவே சென்றனரா போன்ற விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ள னர். (4-6-250)

# முள்ளிவாய்க்கால் கஞ்சி மன்னாரில் வழங்கி வைப்பு



(மன்னார்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் மூன் றாவது நாளாக நேற்று மன் னார் மாவட்ட பொது வைத்திய சாலை முன்பாக இடம் பெற்றது.

இதன் பொழுது மன்னார் மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீடுகளுக்கு சென்று அரிசி,விறகு என்பன திரட்டப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி ஆக்கப் பெற்று பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டது.

இனப்படுகொலை இடம் பெற்ற வேளை மக்களின் அடிப் படை ஆதாரமாக காணப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி தொட ர்பான துண்டு பிரசுரமும் விநி யோகிக்கப்பட்டது.

அதிகளவான மக்கள் உண ர்வுபூர்வமாக கலந்து கஞ்சியை அருந்தி சென்றனர். (4-6-285)

# உழவு இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் திருட்டு



(தருமபுரம்)

இராமநாதபுரம் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் நேற்று வீட்டில் நிறு த்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தில் உள்ள இரு சக்கரங்கள் மற்றும் உழவு இயந்திரத்தின் பெறுமதிமிக்க உதிரிப்பாகங்கள் திருடப்பட்டு ள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய இராமநாதபுரம் பொலி ஸார் மற்றும் தடையவியல் பொலிஸார் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)


# வில்வரசனின் "பசி உறு நிலம்" கவிதை நூல் வெளியீடு

(கரணவாய்)

கவிஞர் வில்வரசனின் "பசி உறு நிலம்" கவிதை நூல் அறி முக நிகழ்வு நாளை மறுதினம் ஞாயி ற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரைச்சிப் பிர தேச சபை மண்டபத்தில் துணுக் காய் கல்வி வலய தமிழ் ஆசிரிய ஆலோசகர் சு.லோகேஸ்வரன் தலைமை யில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீ தரன் கலந்து கொள்ளவுள் ளார். (4-6-60)

# டெங்கு ஒழிப்பு தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்



(முறிகண்டி)

டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் நேற்று பிற்பகல் 2 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் தலை மையில் மாவட்ட செயலக மாநா ட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மாவட்டத்தில் டெங்கு பரவலை கட்டுப்படுத்தல் மற்றும் நுளம்பு பெருகும் இடங்களை பிரதேச செயலாளர் பிரிவுகள் எனும் அடிப்படையில் துப்பரவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்து ரையாடப்பட்டது.

மேலும், எதிர்வரும் 15 ஆம் திகதி கரைச்சி பிரிவில் உள்ள அனைத்து அமைப்புக்கள், திணைக்களங்கள், தொழிற் சாலைகள் அனைத்தையும் ஒன்றாக்கி சிரமதானம் மேற் கொள்ள தீர்மானிக்கப்பட்டதாக அரசாங்க அதிபர் தெரிவித் தார். (4-6-100)

# பேர்ள் கப்பல் தொடர்பான உண்மையை மூடி மறைக்க நிதியமைச்சர் முயற்சி

## அஜித் மன்னப்பெரும குற்றச்சாட்டு

(கொழும்பு)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பான உண் மையை மூடி மறைப்பதற்காக, தான் வழங்கிய தகவலை நிதி யமைச்சர் விஜயதாச ராஜபக்ச பயன்படுத்தியுள்ளதாக பாரா ளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும குற்றம் சுமத்தியு ள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியிருந் தார்.

இங்கிலாந்தில் வசிக்கும் சாமர குணசேகர, மேற்கிந்திய தீவுகள் பகாமஸ் இலுள்ள வங் கிக் கணக்கிற்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணத் தைப் பெற்றுள்ளதாக நீதியமை ச்சர் விஜேதாச ராஜபக்சவிடம் நான் தெரிவித்தேன்.

அதை அவர் இங்கிலாந்தி லுள்ள ஒரு வங்கிக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளதாக தவறாக புரிந்து கொண்டுள்ளதாக தெரி வித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ்பேர்ள் விவகாரம் குறித்த உண்மையை மூடி மறைக்க தான் வழங்கிய தக வலை நீதியமைச்சர் பயன்படு த்தியுள்ளார்.

குறித்த பிரச்சினை தொடர் பில் அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக நான் அவரை நம்பி உறுதிப்படுத்தப் படாத தகவலை அவருக்கு வழ ங்கியிருந்ததாக அவர் குறிப்பிட் டார்.

அது உறுதிப்படுத்தப்பட்ட தகவலாக இருந்தால் நான் அதை இரகசியமான முறையில் அவருக்கு வழங்கியிருக்க மாட் டேன். குறித்த விடயம் தொடர் பில் கவனம் செலுத்துமாறு கோரி நான் அவருக்கு தகவலை வழங்கினேன்.

அதை செய்யாமல் அவர் ஊடகங்களுக்கு அந்த இரகசிய தகவலை சொல்லிவிட்டு மயில் போல் ஆட்டம் போட்டார்.

இப்போது அவர் வெளியிட்ட தகவல் தவறு என தெரிந்த பின் மீண்டும் என் மேல் பழிபோட தொடங்கி விட்டதாக மன்னப்பெரும குற்றம் சுமத்தியுள்ளார். (4-6)

# குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

புத்தளம் பகுதியில் நேற் றுக் காலை குளிக்கச் சென்ற ஒருவர் மாயமாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித் தனர்.

இந்நிலையில் அப்பகுதி மக்கள் தேடுதல் நடவடிக் கையில் ஈடுபட்ட வேளை நீரில் மிதந்த நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலி ஸாருக்குத் தகவல் வழங்கி யுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத் திற்கு பொலிஸார் வருகை தந்ததோடு திடீர் மரண விசாரணை அதிகாரி வர வழைக்கப்பட்டார்.

இதன்போது திடீர் மரண விசாரணை அதிகாரி சடல த்தைப் பார்வையிட்ட பின்னர் வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்க உத்தரவிட்டுள் ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தில்லையடி பகுதியைச் சேர் ந்த 67 வயதுடைய ராமை ய்யா நடேசன் என்பவரென அடையாளம் காணப்பட்டுள் ளார்.

மேலும் மேலதிக விசார ணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 176





திடீரென்று கண் குருடாகப் போய் விட்டதா, என்ன? இது என்ன பைத்தியக்கார எண்ணம்! கண் திடீர் என்று எப்படிக் குருடாகும்? இன்னும் கொஞ்சம் நடந்து பார்க்கலாம்.

மேலே தூண் ஒன்றும் கைக்கு அகப்படவில்லை! ஏதோ பள்ளத்தில் இறங்குவது போன்ற உணர்ச்சி உண்டாகிறது! ஆ! இதோ ஒரு படி! நல்லவேளை, விழாமல் தப்பினோம்! இப்படியே இந்த இருட்டில் ஒன்றும் தெரியாமல் எத்தனை நேரம், எத்தனை தூரம் போவது?.. எதனாலோ வந்தியத்தேவன் மனத்தில் ஒரு பீதி உண்டாயிற்று. மேலே போகத் துணிவு ஏற்படவில்லை.

வந்த வழியில் திரும்ப வேண்டியதுதான்! கதவைத் திறந்து கொண்டு லதா மண்டபத்துக்கே போக வேண்டியதுதான்! இந்தப் பயங்கர இருட்டில் உழலுவதைக் காட்டிலும் நந்தினியை மீண்டும் சந்தித்து அவளுடைய யோசனைப்படி நடப்பதே நல்லது. என்ன வாக்குறுதி கேட்டாலும் இப்போதைக்குக் கொடுத்து விட்டால், பிறகு சமயம் போல் பார்த்துக் கொள்கிறது! இவ்வாறு எண்ணி வந்தியத்தேவன் திரும்பினான். ஆனால் திரும்பிச் செல்லும் வழி வந்த வழியே தானா? எப்படிச் சொல்ல முடியும்!. நடக்க நடக்கக் கைக்கு ஒன்றும் தட்டுப்படவில்லையே! அந்தக் கருங்கல் தூண்கள் எங்கே போயின! கதவைக் கண்டுபிடிக்க முடியாமலே போய் விடுமோ? இரவெல்லாம் இந்த இருளில் இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க நேரிடுமோ? கடவுளே! இது என்ன ஆபத்து!

ஆகா! இது என்ன ஓசை! சடசட வென்ற ஓசை! எங்கேயிருந்து வருகிறது? வௌவால்கள் சிறகை அடித்துக் கொள்ளும் ஓசையாக இருக்க வேண்டும். அவ்வளவு இருட்டில் வௌவால்கள் நிறையக் குடிகொண்டிருப்பது இயல்புதானே? இல்லை! இது வௌவால் இறகின் சத்தம் மட்டும் இல்லை! காலடிச் சத்தம்! யாரோ நடக்கும் சத்தம்!. நடப்பது யார்? மனிதர்கள்தானா? அல்லது வந்தியத்தேவனுடைய தொண்டை உலர்ந்து போயிற்று! நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது! திடீரென்று யாரோ அவன் முகத்தில் இடித்தாற் போலிருந்தது.

வந்தியத்தேவன் தன் சக்தியையெல்லாம் காட்டி ஒரு குத்து விட்டான்! குத்திய கை துண்டிக்கப்பட்டது போல வலித்தது. இன்னொரு கையினால் தொட்டுப் பார்த்தான். இருட்டில் கருங்கல் தூணின் மேல் மோதிக் கொண்டதுமல்லாமல் அதைக் குத்தியதாகவும் தெரிந்து கொண்டான்! கையை அவ்வளவு 'விண், விண்' என்று வலித்திரா விட்டால் வந்தியத்தேவன் சிரித்தேயிருப்பான். ஆயினும் அதனால் அவனுடைய பயம் சிறிது அகன்றது.

முழுதும் அகலவில்லை. காது கொடுத்துக் கேட்ட போது அந்தக் காலடிச் சத்தம் மேலும் மேலும் கேட்டது. ஒரு சமயம் எட்டிப் போவது போல இருந்தது! இன்னொரு சமயம் நெருங்கி வருவது போல் இருந்தது! வந்தியத்தேவன் நின்ற இடத்திலேயே நின்று உற்றுக் கேட்டான். அதே சமயத்தில் ஓசை வந்த திசையை நோக்கி அவனுடைய கண்களும் உற்றுப் பார்த்தன.

கையினால் தடவிக் கொண்டே போகலாம். முதலில் தெரிந்த தூண் இப்போது இல்லாமல் எங்கே போய்விடும்.? சற்றுத் தூரம் குருடனைப் போல் கையை முன்னால் நீட்டிக் கொண்டு வந்தியத்தேவன் நடந்தான்.

அவன் நினைத்தபடியே ஒரு தூண் கைக்குத் தட்டுப்பட்டது! ஆ! எவ்வளவு பெரிய தூண்! கருங்கல் தூண்! இதைச் சுற்றி வளைத்துக் கொண்டு மேலே போய்ப் பார்க்கலாம். மேலும் கொஞ்ச தூரம் நடந்ததும் இன்னொரு தூண் கைக்கு அகப்பட்டது. ஆனால் இன்னமும் கண்ணுக்கு ஏதும் தெரிந்தபாடாயில்லை.

(தொடரும்)



## சிறுவர் அரங்கம்



### கடல் கன்னியும் கைசனும்

"ஆனால் அரசே அதற்கு ஒரு வாரம் ஆகும் " அரசவை பொற்கொல்லன்." உன்னால் முடியாதல்லவா, உடனே உன்னை நாடு கடத்துகிறேன்" என்று உத்தரவிட்டார். அரசரின் ஒவ்வொரு நடவடிக்கையும் மக்கள் மனதில் பயத்தை கொண்டு வந் தது. அவரை பற்றி பேசு வதற்கே பயந்தனர்.

அவர் மக்கள் என்ன பேசுகிறார் என்பதை அறிவதற்கே உளவாளிகளை வைத்து இருந்தார். யாராவது பேசினால் சிறைத் தண் டனை அல்லது நாடு கடத்தப்பட்டார்கள். இது ஏதும் கைசனுக்கு பிரச்சனை கொண்டு வரவில்லை. அவன் கடல் அருகே அமை தியான் வாழ்க்கை வாழ்ந்திருந்தான். ஆனால் ஒருநாள் அரசர் நாட்டை சுற்றிப் பார்க்க கிளமபினார். அவர் கடலையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே பயணித்தார். அங்கு அழகான அலெனா பாறையின் மீது அமர்ந்து இருந்தாள். அவளை பார்த்ததும் ரசித்து கொண்டே அருகில் சென்றார். கடலில் இருந்து அந்த சமயத்தில் கைசன் திரும்பினான்.

அவர்கள் நெருக்[illegible] இருப்பதை பார்த்[illegible]சருக்கு கோபம் வந்தது. "யார் இவன்? என்றார் அரசர். சிப்பாய் அவன் நம் அரண்மனைக்கு மீன்கள் தரும் மீனவன் என்றான். சரி அவன் நாளை என்னை பார்க்க வேண்டும் என்று உத்தரவிட்டார். கைசன் மறுநாள் அரசவைக்கு வந்தான். அரசர் கடற்கரையில் படை காவலாளிகள் தங்குவதற்கு டெண்ட் அமை[illegible] பாதி இடம் காலியாக இருக்க வேண்டும் என்று சொன்னார். கைசன் ஆனால் அரசே அது எப்படி முடியும் என்றான். அனைவரும் கைசனை பார்த்தனர்.

இரண்டு நாட்களில் நீ அதை செய்தாக வேண்டும் இல் லையெனில் நாடு கடத்தபடுவாய் என்று உத்தர விட்டார். அவன் பயந்தவாரே வீட்டிற்கு திரும் பினான். அவன் முகம் வாடியிருப்பதை பார்த்த அலெனா, என்னாயிற்று? என்றாள். அரசர் இர்ண்டு நாட்களில் படைகாவ லாளிகளுக்கு டெண்ட் அமைக்க சொன்னார் ஆனால் அது எப்படி முடியும், அதில் பாதி இடம் காலியாக வேறு இருக்க வேண்டுமாம் என்றான். அவ்வளவுதாணா? என்றாள் அலெனா. ஒரு சொடக்கு போட்டாள். அரசர் எதிர்பார் த்த மாதிரியே டெண்ட் ரெடி ஆகியது. அரசர் வந்து பார்வையிட்டார். இவன் எப்படி இதை செய்து முடித்தான் என சிந்தனையில், உக்கா ருவதற்கு மேசைகள்யார் அமைப் பார், நாளைக்குள் அது அனைத்தும் இருக்க வேண்டும் இல்லையெனில் உன்னை உடனடியாக நாடு கடத்தி விடுவேன் என்றார்.

அவன் மறுபடியும் சோகமாக இருந்தான். அலெனா என்னாச்சு? ஏன் அழுகிறாய் என்றாள். அவன் அரசர் சொன்னதை கூறினான். அலெனா சரி கவலையை விடு, எனக்கு தெரிந்த தோழிகள் இதை சிறப்பாக செய்வார்கள் என்றாள். சொடக்கு போட்டாள். அலெனா தோழிகள் வந்தனர்.

அரசர் கேட்ட மேஜை வேலைகளை முடித்தனர். அரசர் வந்து பார்த்ததும் ஆச்சர்யபட்டார். இவன் எப்படி இதை முடித்தான் என நினைத்து கொண்டே கைசனை அழைத்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இந்த உலகத்தில் அனைவருக்கும் வரலாற்றில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளிலேயே உள்ளது.
> -அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக்கு இருக்கக்கூடிய இந்தியப் பயத்தை உணர்ந்தோமா?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும் என்ற நினைப்பு சிறிதளவேனும் இலங்கை ஆட்சியாளர்களிடம் இருக்கிறதெனில், அதற்குக் காரணம் இந்தியா என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

அதிலும் இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி இருப்பதுதான் இலங்கை அச்சப்படுவதற்குக் காரணம் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

மாறாக பாரதத்தில் காங்கிரஸ் ஆட்சி நடந்திருக்குமாயின், ஈழத் தமிழர்களின் நிலைமை படுமோசமாக இருந்திருக்கும் என்பதை வன்னி யுத்த காலத்தை ஆதாரப்படுத்திக் கூறமுடியும்.

ஆக, இனப் பிரச்சினையைத் தீர்க்கின்றோம் தீர்ப்போம் எனத் தொடர்ச்சியாகக் கூறி காலம் கடத்துவது சரிவராது என்பது இலங்கை ஆட்சியாளர்களுக்கு நன்கு புரியும்.

ஏனெனில் ஒரு கட்டத்துக்கு மேல் பிரதமர் மோடியை ஏமாற்ற முடியாதென்பதை இலங்கை நன்கு உணர்ந்துள்ளது.

தவிர, எங்களின் விடயத்தில் இந்தியாவின் ஆதரவு இல்லாமல் எதுவும் ஆகாது என்பதும் நிதர்சனமான உண்மை.

இருந்தும் அந்த உண்மையை நம் தமிழ் அரசியல்வாதிகள் இன்னமும் உணர்ந்து கொள்ளாதவர்களாக இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஆம், பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி தொடர்பில் இந்த நாட்டின் ஆளுந்தரப்பு மட்டுமல்ல, பௌத்த பீடங்களும் கடும் அச்சம் கொண்டுள்ளன.

இந்த அச்சம் குறித்து பௌத்த பிக்குகள் சர்வதேச சந்திப்புகளின்போது பிரஸ்தாபித்துள்ளனர்.

ஆயினும் அதனை நாம் இன்னமும் அறியாதவர்களாக இருப்பது எங்களின் சாபக்கேடு எனலாம்.

உண்மை. இந்தியாவுக்கு வாருங்கள். இனப் பிரச்சினை தொடர்பில் பேசுவோம் எனப் பிரதமர் மோடி தமிழ் அரசியல் தரப்புகளை அழைத்திருந்தார்.

ஆனால் அந்தச் சந்திப்புக்கான தேவைப்பாட்டை - அவசரத்தை தமிழ்த் தரப்புகள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

உண்மையில் எங்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

அதிலும் பிரதமர் மோடி அவர்கள் இந்தியப் பிரதமராக இருக்கும்போது எங்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாவிட்டால், அதன் பின்பான எங்களின் நிலைமை வேறு விதமாக மாறிவிடும்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் ஆதரவையும் அவர்களின் ஆலோசனையையும் ஈழத் தமிழர்களாகிய நாம் பெற்றுக் கொள்வதுடன் இந்தியாவை எங்களின் பலமாகக் காட்டிக் கொள்ள இந்திய மத்திய அரசுடன் நல்லுறவைப் பேண வேண்டும்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில்
# தமிழ் பேசும் முஸ்லீம் தரப்புக்களையும் ஜனாதிபதி ரணில் அழைக்க வேண்டும்
## பாராளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலின் போது தமிழ் பேசும் முஸ்லீம் தரப்புக்களையும் உள்வாங்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியிருந்தார்.

கடந்த காலங்களை போல் அல்லாது பேச்சுவார்த்தையில் தீர்க்கமான முடிவு ஒன்றினை ஜனாதிபதி வழங்கவேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

முன்னெப்போதும் இல்லாதவாறு வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் மற்றும் வரலாற்று இடங்கள் திட்டமிட்டு பௌத்த பேரினவாதிகளினால் கையகப்படுத்தப்படுவதாக செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தினார். (ம-7,9)

## நடுத்தர வர்க்கத்தினருக்கு
# வீடமைப்புத் திட்டம்
## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

நடுத்தர வர்க்கத்தினருக்காக அடுத்த மூன்று வருடங்களில் 25. பில்லியன் ரூபா பெறுமதியான ஐந்து வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

866 வீடுகளைக் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டம் வெலிசர, நிட்டம்புவ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை, அதுருகிரிய மற்றும் கடுவெல பிரதேசங்களில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த வீட்டுத்திட்டங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இந்த ஐந்து வீடமைப்புத் திட்டங்களில் நிட்டம்புவ மற்றும் வெலிசர வீடமைப்புத் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் இந்த வருடத்திற்குள் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று வீடமைப்புத் திட்டங்களும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நிட்டம்புவ வீடமைப்புத் திட்டம், கிராம அமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்படும் விசேட திட்டமாகும். நாட்டின் அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்த அரச மற்றும் தனியார் துறை பிரஜைகளுக்கு இது ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-7,9)

## கட்டைக் காட்டுக் கடற்பரப்பில்
# சுருக்குவலை தொழிலில் ஈடுபட்ட ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுக் கடற்பரப்பில் சட்டவிரோத சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரண்டு படகுகளும் அதிலிருந்த ஐவரும் கடற்படையால் கைது செய்யப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை கட்டைக்காட்டு கடற்பரப்பில் இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை நீரியல் வளத்துறை அதிகாரிகள் பிணையில் விடுவித்துள்ளதாகவும் அவர்களது வழக்கு எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அதி காரிகள் தெரிவித்துள்ளனர். (ம-7,9,104)

## வவுனியா-கொழும்புக்கு மேலும் ஒரு சொகுசு பேருந்து சேவை

(வவுனியா)

திருத்த வேலை காரணமாக வவுனியா- கொழும்பு புகையிரதப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு மேலும் ஒரு சொகுசுப் பேருந்து சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரவு 1.30 மணிக்கு அதி சொகுசு பேருந்து வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பை சென்றடையும். பின்னர் கொழும்பில் இருந்து நண்பகல் 12.30 இற்கு புறப்பட்டு மாலை வவுனியாவை வந்தடையும்.

இதற்கான ஆசனப் பதிவுகளை புதிய பேருந்து நிலையத்தில் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும்.

இதேவேளை ஏற்கனவே இரவு 11 மணிக்கு ஒரு அதிசொகுசு பேருந்து வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி சென்று, காலை 9.30 இற்கு மீண்டும் வவுனியா நோக்கி செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,250)

## வவுனியாவில் விபத்து
# இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா கோவிற்குளம் பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இரு மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் இரு மோட்டார் சைக்கில்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (ம-7,9)

## மொனராகலையில் விபத்து 23 வயது இளைஞன் பலி

(கொழும்பு)

மொனராகலை தம்பகல்ல பகுதியில் உந்துருளி ஒன்று வேகக்கட்டுப்பாட்டையிழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்பகல்ல மாரியாராவ பிரதான வீதியின் 7ம் இலக்க கட்டைப் பகுதியில் மாரியாராவ நோக்கிப்பயணித்து கொண்டிருந்த உந்துருளியே வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதியைவிட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் போது பலத்த காயமடைந்த நபர் தம்பகல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 23 வயதுடைய மாரியாராவ தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

விபத்து தொடர்பில் தம்பகல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9)

## யாழைச் சேர்ந்த இளைஞன்
# கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து யாழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போலி கனேடிய விசாவைப் பயன்படுத்தி வெளிநாடு சென்ற நபர் ஒருவரை கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 21 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

டோக்கியோ ஊடாக கனடா செல்லவிருந்த போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபருக்கு போலி விசா வழங்கியவர்களைக் கண்டுபிடிப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- I

09

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



சில காலத்தின் பின் நீண்ட தடிகளும், துடுப்புக்களுடன் சேர்ந்து செயற்படுத்தப்பட்டன. வள்ளங்களை சமநிலையில் வைப்பதற்கு மேலும் உறுதிசெய்ய 'சிறு குல்லா' என்று அழைக்கப்படும் ஒருவித அமைப்பு சற்று, வளைந்த இருதடிகளினால் பொருத்தப்பட்டன. இவ்வாறுதான் கலங்கள் சிறிது சிறிதாக மீன்பிடித் தொழிலுக்கு ஆரம்பத்தில் இருந்து மிக உறுதுணையாக நின்று சேவையாற்றி வந்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

பண்டைக் காலந் தொட்டுப் பயன்படுத்தப்பட்டு வரும் மரத்தால் ஆக்கப்பட்ட மீன் பிடிக்கலன்கள், பாரம்பரிய மீன்பிடிக்கலன்கள் எனப்படும். இவை துடுப்பு வலிப்பதன் மூலமோ,கோலை ஊன்றி உந்தித் தள்ளுவதன் மூலமோ காற்றின் உதவியுடனோ இயக்கப்படும்.

இலங்கையில் கட்டுமரம், தோணி, ஓடம், படகு, பாய்க்கப்பல் போன்ற பாரம்பரிய மீன் பிடிக்கலன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது மரத்தினால் ஆக்கப்பட்டிருக்கும்.இது பாதுகாப்புக் குறைவானதாகும். இதில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே பயணிக்க முடியும். கடனீரேரிகள், ஆழம் குறைவான கடல், உண்ணாட்டு நீர் நிலைகள் போன்றவற்றில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக இவை பயன்படுத்தப்படுகின்றன.

பாறுவ எனப்படுவது பாரம்பரிய மீன்பிடிக்கலனாகும். பொதுவாக மேற்கு,தெற்கு,தென்மேற்குக் கடற்கரைப் பிரதேசங்களில் இது பயன்படுத்தப்படுகிறது. தோணி இலங்கை மீனவர்களிடையே மிகப் பிரபலமான பாரம்பரிய மீன் பிடிச்சாதனமாகும். இது நாட்டின் தெற்கு, மேற்கு பிரதேசங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படும். மேற்கு,வடமேற்குப் பகுதி கத்தோலிக்க மீனவர்களிடையே தெப்பம் மிக பிரபல்யமானதாகும். இது மரக்குற்றிகளைப் பிணைத்து உருவாக்கப்பட்டதாகும். வடக்கு கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மீனவரிடையே வள்ளம் மிகப் பிரபல்யம் பெற்று விளங்குகிறது.

இந்த மீன் பிடிக்கலனைச் செயற்படுத்தும் போது காற்று, காலநிலை ஆகியன செல்வாக்குச் செலுத்தும். பருவப் பெயர்ச்சி மழைக் காலங்களில் மிக அதிகமாகவும் மற்றைய காலங்களில் மிகக் குறைவாகவும் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆழ்கடலை நோக்கிப் பயணிக்க அதிக உழைப்பும் பயிற்சியும் அவசியமாகும்.மரபு ரீதியான மீன் பிடிக்கலன்களைப் பயன்படுத்தி கரையோரத்திலிருந்து 2கி.மீ தூரம் வரை மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

பாரம்பரிய மீன்பிடிக் கலன்களைத்தயாரிக்க அக்காலத்தில் மரக் குற்றிகள் பயன்படுத்தப்பட்டாலும் கூட இப்போது இதற்கென கண்ணாடி நாரிழை பயன்படுத்தப்படுகிறது. மேலும் இவற்றுக்குப் புற இணைப்பு என்ஜினை பொருத்தி இயக்குவதன் மூலம் இதன் செயற்றிறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இயந்திரம் பூட்டப்பட்ட பாரம் பரிய கலன்களின் மூலம் 15கி.மீ தூரம் மீன்பிடியை மேற்கொள்ள முடியும். இந்த மீன்பிடிக் கலன்களை பயன்படுத்தும் மீன்பிடி தொழிலாளர்கள் சிறிய கண்கள் கொண்ட செவுள் வலையைப் பயன்படுத்தி மீன் பிடிப்பார். அவர்கள் பொதுவாக கரையோர மேல் நீர்ப்படையில் உள்ள மீன்களைப்பிடிப்பர்.

### தெப்பம்

எமது நாட்டில் தற்போது கூடப் பாவனையில் உள்ள தொன்மையான ஓர் உபகரணம் தெப்பமாகும் (படம்-b) . மரக்குற்றிகளைக் கிடத்தி அவற்றை ஒன்றாக இணைத்துத் தயாரிக்கப்படும் ஓர் எளிதான உபகரணமாகும். பாரிய மரக்குற்றிகள் நான்கு துளைக்கப்பட்டு அத்துவாரங்கள் ஊடாக ஓர் ஆப்பினை நுழைத்துப் பின்னர் குற்றிகள் ஒன்றோடொன்று பிணைக்கப்படும். மேற்படி குற்றிகள் மலைவேம்பு அல்லது அல்பீசியா மரத்திலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி குற்றிகள் நீள் சதுர வடிவமான வையாகும். தெப்பத்தின் ஓர் அந்தத்தின் உள்ள குற்றிகளின் வெளிப் பகுதி ஒரு தோணியின் தோற்றத்தை ஒத்திருக்கும்.இவை கடநீரேரிகளிலும், கடலிலும் மீன் பிடித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலும் மேல், வடமேல், வட மாகாணங்களில் உள்ள மீனவரிடையே இவை பிரபல்யமானவை, எனலாம். தெப்பங்களில் கொண்டு செல்லப்படும் வலைகள் சிறிய கண்களைக் கொண்ட செவுள்வலைகள் அல்லது மூவலைகளாகும். அதில் தனியொரு மீனவன் அல்லது இரண்டு மீனவர்கள் தொழிலில் ஈடுபடலாம்.



தெப்பம் ( படம்-b)



கண்ணாடி நாரிழைத் தெப்பம்



கட்டுமரம் ( படம்-a)



தோணி படம்-d

### கட்டுமரம்

கட்டுமரமானது (படம்-a) தொன்மை வாய்ந்த ஒரு மரபுவழி உபகரணமாகும். தெப்பத்தைத் தயாரிப்பதைப் போலவே இதனையும் தயாரிப்பார்கள். எனினும் கட்டுமரத்துக்காக நீளமானதும் பருமனானதுமான குற்றிகளே பயன்படுத்தப்படுகின்றன. வெவ்வேறு முறையில் கட்டுமரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இவை பெரும்பாலும் 04 அல்லது 05 மரக்குற்றிகள் இணைக்கப்பட்டுத் தயாரிக்கப்படுகின்றன. மத்தியில் காணப்படும் மரக் குற்றிகள் இரு புறம் உள்ள இரண்டு குற்றிகளை விட அதிக நீளங்கொண்டவை. மூன்று மரக்குற்றிகளாலும் கட்டுமரங்கள் ஆக்கப்படுகின்றன. எனினும் இவற்றின் எண்ணிக்கை குறைவாகும்.

மரக் குற்றிகளை அருகருகே கிடத்தி அவற்றின் இரு அந்தங்களையும் குற்றிகள் ஒன்றோடொன்று இணையுமாறு பொருத்தி, வன்மையான கயிறுகளால் கட்டுவார்கள். கடலில் மாத்திரமன்றி கடநீரேரிகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் சென்று, மூவலைகள் மற்றும் சிறிய கண்களைக்கொண்ட செவுள் வலைகள் மூலம் மீன்கள் பிடிக்கப்படுகின்றன.

### வள்ளம்

வள்ளம் (படம்-C) ஒரு தொன்மையான உபகரணமாகும். வடக்கு, வட கீழ், கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் இதனைப் பயன்படுத்துகின்றனர். ஒரு மரக்குற்றியைக் குடைந்து தயாரிக் கப்பட்ட இதன் தோற்றம் தோணியை ஒத்திருக்கும். இது 06 - 12 மீற்றர் நீளமுடையது. இதில் தனியொரு மீனவன்அல்லது நான்கு மீனவர்கள் செல்லலாம். கடற்கரைக்கு அண்மையில் உள்ள கடலில் மீன் பிடிப்பதற்காக இதனைக் கையாளுவர்.

### தோணிகள்

இலங்கையின் தென்பாகத்திலும் தென் மேல்பாகத்திலும் சிறிய அளவில் மீன்பிடித்தலில் தோணி (படம்-d) பிரபலமானதாகும். தோணிகளின் நீளத்தின் பிரகாரம் அவற்றை மூன்றாக வகைப்படுத்த முடியும் அவை வருமாறு.(1) சிறியதோணி 5-6 மீற்றருக்கு இடைப்பட்ட நீளமுடையது. (2) சாதாரண தோணி 7-8 மீற்றருக்கு இடைப்பட்ட நீளமுடையது. (3) பெரியதோணி 10-12 மீற்றருக்கு இடைப்பட்ட நீளமுடையது.

தோணியோடு ஒருபலகை பொருத்தப் பட்டிருக்கும். தோணியிலிருந்து இரண்டு பின்னல்கள் மூலம் சுமார் 3 மீற்றர் நீளமான ஒரு குல்லாக்கட்டை பிணைக்கப்பட்டிருக்கும். இரண்டு அல்லது மூன்று மீனவர்கள் இதில் சென்று மீன்களைப் பிடிக்கலாம். ஒரு பெரிய தோணியாயின் சுமார் நான்கு மீனவர்கள் சென்று மீன் பிடித்தொழிலில் ஈடுபட முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

தால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுற்று வட்ட வீதியில் குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் "தமிழர்களின் தொன்மையை அழிக்காதே, வெடுக்குநாறி எங்கள் சொத்து, தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலி, நீதியில்லா! நாட்டில் நீதிமன்றம் எதற்கு, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

சுமார் 30 நிமிடம் நடைபெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சிலரும் கலந்து கொண்டனர். (ம-7,9,250)

## வெடுக்குநாறி...

மற்றும் ஆலய நிர்வாக உறுப்பினர் ஆகியோர் வவுனியா நீதிமன்றால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா வெடுக்குநாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் அண்மையில் உடைத்து அழிக்கப்பட்டநிலையில் வவுனியா நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மீண்டும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

எனினும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டபோது நீதிமன்ற உத்தரவு கருத்தில் கொள்ளப்படாது தொல்பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக தெரிவித்து நெடுங்கேணி பொலிஸாரால் ஆலய பூசகரும், நிர்வாக உறுப்பினர் ஒருவரும் நேற்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டனர். எனினும், குறித்த வழக்கின் முறைப்பாட்டாளர்களாக ஆலய நிர்வாகமும் பூசகரும் இருப்பதனால் அதே வழக்கில் அவர்களை சந்தேக நபர்களாக பெயரிடுவது வழக்கிற்கு முரணாக அமையும் என்பதை மன்றுக்கு சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், அவர்களை வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு மன்றிடம் கோரினர்.

பொலிஸார் மற்றும் சட்டத்தரணிகளின் கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்திய மன்று கைது செய்யப்பட்ட இருவரையும் வழக்கிலிருந்து விடுவித்தது. அத்துடன், ஆலயத்தில் கட்டுமானங்களையோ மாற்றங்களையோ ஏற்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், பூஜை வழிபாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இறை விக்கிரகங்களை உடைத்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை விரைந்து எடுக்குமாறும் பொலிஸாருக்கு பணிக்கப்பட்டது.

குறித்த வழக்கில் ஆலய நிர்வாகம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு அருள் தலைமையிலான வவுனியா சட்டத்தரணிகள் குழாம் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,250)

## கிணற்றில்...

பெண் ஒருவர் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் ஆர்.நியாளினி (வயது-37) என்ற 3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த பெண் நேற்று முன்தினம் நித்திரைக்கு சென்றுள்ளார். பின்னர் அவரது குடும்பத்தார் நேற்று காலை எழுந்து பார்த்த வேளை குறித்த பெண்ணைக் காணவில்லை.

இந்நிலையில் அவர்கள் குறித்த பெண்ணைத் தேடும் பணியில் ஈடுபட்டு வந்த நிலையில் குறித்த பெண் நேற்று காலை வீட்டுக்கு அருகே உள்ள கிணறு ஒன்றில் சடலமாக மிதப்பது அவதானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண் உடுவில் பிரதேச செயலகத்தில் கடந்த ஆறுமாத காலமாக காணி பிரிவில் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,9,104)

## எழுந்தமானமாக...

கள். ஒருவரை கைது செய்து வழக்கு தொடர்வதெனில் சரியான ஆதாரங்களை நீதிமன்றத்துக்கு சமர்ப்பியுங்கள் என தொல்லியல் திணைக்களத்துக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்த வவுனியா நீதிமன்றம், வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை சேதப்படுத்தி அடித்தளம் அமைத்தது, நீதிமன்ற உத்தரவுப்படி சேதமடைந்த சிலைகளை வைக்காமல் புதிய சிலைகளை வைத்த குற்றச்சாட்டில் நெடுங்கேணி பொலிஸாரால், ஆலய பூசகர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர்கள் நேற்று வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

வவுனியா நீதிமன்ற நீதிபதி, தொல்லியல் திணைக்களத்தினரைக் கடுமையாகக் கடிந்து கொண்டார்.

யாரையும் சும்மா சும்மா கைது செய்து கொண்டு வந்து நீதிமன்றத்தில் நிறுத்தாதீர்கள். ஒருவரை கைது செய்து வழக்கு தொடர்வதெனில் உரிய ஆதாரங்கள் இருக்க வேண்டும் என கடிந்து கொண்டதுடன், கைதான நால்வரையும் விடுவித்து உத்தரவிட்டார். (ம-7,9)

## காணி...

தகுதியான குழுவொன்றினை நியமிக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

காணி முகாமைத்துவம்தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட காணிச் சட்டங்களே இன்றும் நடைமுறையில் உள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, காணி பயன்பாடுகள் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள்நடைமுறை அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பொருத்தமற்றதாக காணப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு காணிகளை பெற்றுக்கொடுப்பதில் காணப்படுகின்ற சிக்கல்களை நீக்கி புதிய தேசிய காணிக்கொள்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இங்கு தீர்க்கமாக ஆராயப்பட்டது.

அதற்காக காணி ஆணைக்குழுவின் ஊடாக மாகாண சபை காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளை நிவர்த்திக்குமாறும், கிராமசேவகர் பிரிவுகள் மட்டத்தில் காணப்படுகின்ற காணி உரிமையாளர்களின் விபரம் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகள் மற்றும் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்ற காணிகள் தொடர்பில் கண்டறிந்து பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அறிக்கையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (ம-7,9)

## விலை மீண்டும்...

எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 0.2% ஆக அதிகரித்து 76.58 அமெரிக்க டொலர்களாக பதிவானது.

அமெரிக்க மசகு எண்ணெய் விலையும் 0.2% ஆக அதிகரித்து 72.84 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

அமெரிக்காவில் எரிபொருள் தேவை வலுவடைந்துள்ளதனால் சர்வதேச சந்தையில் எரிபொருளுக்கான விலை அதிகரித்துள்ளது. (ம-7,9)






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப்புச்சப்பற்ற...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு- கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது. இச்சந்திப்பின் போது.

- 1985 ஆம் ஆண்டு இருந்த வரைபடத்திற்கு அமைய காணிகளை விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் எம்.பிக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம். அரசியல் கைதிகள் விவகாரம். காணிப் பிரச்சினை. பயங்கரவாதத் தடைச்சட்டம் குருந்தூர் மலை விவகாரம் மற்றும் வெடுக்கு நாறி மலை விவகாரம் என பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன். எங்கு பிரச்சினைகள் உள்ளதோ அங்கு திணைக்கள தலைவர்களை கொண்டு பிரச்சினைகளை தீர்க்கமுடியுமா என்று ஆராய வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இன்று மாலை 5.00 அளவில் மீண்டும் முன்னெடுக்கப்படவுள்ள கலந்துரையாடலில் அரசியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க தரப்பில் இருந்து அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ. சட்டமா அதிபர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் மற்றும் பிள்ளையான் என பலர் பங்குபற்றினர்.

வடக்கு - கிழக்கு தமிழ் எம்.பிக்கள் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி.விக்னேஸ்வரன் எம்.ஏ.சுமந்திரன். சிவஞானம் சிறீதரன். கலையரசன். ஜனா. சித்தார்த்தன். செல்வம் அடைக்கலநாதன். சாள்ஸ் நிர்மலநாதன். சாணக்கியன். அங்கஜன் இராமநாதன். வினோ. ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7.9)

## போதை...

காரணமாக கடந்த ஒரு மாத காலமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-7.9.30)

## யூரியாவின்...

எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

இதன்படி ஹெக்டேயர் ஒன்றுக்கு 20.000 ரூபா பெறுமதியான வவுச்சரும். இரண்டு ஹெக்டேயருக்கு 40.000 ரூபா பெறுமதியான வவுச்சரும் வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (ம-7.9)

## தலைமன்னாரி...

ஒன்று இரு சிறுவர்களுக்கு இனிப்பு பொருட்களை வழங்கி கடத்துவதற்கு முற்பட்ட நிலையில் பொது மக்களின் உதவியுடன் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியமளவில் வாகனத்தில் வியாபார பொருட்களை விற்பனை செய்ய வந்த வாகனம் ஒன்றில் இருந்த ஓட்டுனர் அவ் வீதி வழியாக பயணித்த இரு சிறுமிகளுக்கு இனிப்பு பொருட்களை வழங்கி வாகனத்தில் கடத்த முற்பட்ட சமயம் இரு பிள்ளைகளும் தப்பி சென்று கிராமத்தவர்களுக்கு தெரிவித்த நிலையில் வாகன சாரதி மற்றும் உதவியாளர் மடக்கி பிடிக்கப்பட்டனர். (ம-7.9.285)


**VILLAGE HOTEL**
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்
077 544 8503 (15337)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு (C-6530)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

**பெண் விற்பனையாளர் தேவை**
எமது புடைவை நிறுவனத்திற்கு புடைவை வியாபாரம் செய்யக்கூடிய பெண் விற்பனையாளர்கள் தேவை.
சிவகணேசன் TEX
இல.41, பெரியகடை
யாழ்ப்பாணம். (14097)

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும் (C-6530)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**கண்ணீர் அஞ்சலி**
எமது சங்கத்தின் அங்கத்தவர் பொதுசன தொடர்பு அலுவலர் திரு. **கந்தவனம் உதயகுமார்** அவர்களின் அன்புத் தாயார்
முல்லைத்தீவு செம்மலையை வசிப்பிடமாக கொண்ட
அமரர் திருமதி கந்தவனம் நாகம்மா
அவர்கள் 11.05.2023 ஆம் திகதி இறைபதமடைந்துள்ளார்.
இவரது குடும்பத்தாருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மண்ணில் 04:03.1942 விண்ணில் 11.05.2023
பிரிவால் துயருறும் அங்கத்தவர்கள்,
நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்,
சுன்னாகம் ப.தெ. வ. அ. கூ. சங்கம் (C-6529)

.வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15497)
076 825 7716 (ஆகாஸ்)

**பத்திரிநாத், கேதார்நாத் யாத்திரை**
நாட்கள் : 16 யாத்தீரீகர்கள் : 10 பேர்
ஆரம்பம் : 10.06.2023
நிறைவு : 25.06.2023
பத்திரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, ஹரித்துவார், ரிஷிகேஸ், குருச்சேத்திரம் இவை அனைத்து ஆலயங்களையும் தவறாது தரிசிக்கலாம்.
விபரங்களை கேட்டறிந்து பதிவுசெய்க
சிரடி பாபா தரிசனம்
ஆரம்பம் : 19.05.2023 (14091)
ஸ்ரீரெங்கநாதன், மகன் ராஜன்
TP : 077 768 0102, 077 736 2154

**கணினி தட்டெழுத்தாளர் தேவை**
சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
076 573 4507 (14092)

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை.
தொடர்புக்கு (C-6531)
077 777 0969
076 760 0403

**புதிய பிளாஸ்ரிக் போத்தல் விற்பனைக்கு**
எம்மிடம் 1000ml, 750ml, 500ml, 325ml, 200ml, 100ml, 50ml, 28ml புதிய பிளாஸ்ரிக் போத்தல்களை மொத்தமாக வாங்குபவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
குறிப்பு - நல்லெண்ணெய்,நெல்லிக்கிரஷ், பனங்களி உற்பத்தியாளர்களுக்கு ஏற்றபிளாஸ்ரிக் போத்தல்களும் எம்மிடம் உண்டு. (C-6527)
சிவா நறுமணப்பூங்கா
இல 288 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
021-222 2567

**விற்பனைக்கு**
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
Plusure
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (14093)
070 667 3759

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் புத்தூரில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம்
காலை 6 முதல் மாலை 6 வரை
முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.
076 911 9371
076 165 3129 (14073)

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. வீ.சேந்தன்
அவர்களின் தந்தை
அமரர் சபாபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு குடும்பத்தினர்க்கு எமது பாடசாலை சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
தோற்றம் 1936.03.27 மறைவு 2023.05.11
பாடசாலைச் சமூகம்
யா/ உயரப்புலம் மெ.மி. வித்தியாலயம் (C-6532)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.